සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

15397 AL/2013/21/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**கவனிக்க :**

- ✻ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✻ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை எழுதுக.***
- ✻ விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ✻ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.


1. பின்வருவனவற்றில் நியமக் கூற்றாக அமைவது எது ?
   (1) பொருளியலாளர்கள் இயற்கை வளங்களை புதுப்பிக்கத்தக்க(renewable) வளங்கள் மற்றும் புதுப்பிக்கப்படமுடியா (non renewable) வளங்கள் என வகைப்படுத்துகின்றனர்.
   (2) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கான ஓர் உதாரணமாகும்.
   (3) பொருளாதாரங்கள் வரையறையற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டுள்ளன.
   (4) இலங்கையின் பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது.
   (5) வருமானம் சமமற்ற முறையில் பங்கீடு செய்யப்படுவது நியாயமற்றதாகும்.

2. நிறை தொழில் மட்டத்திலுள்ள பொருளாதாரமொன்றில் மூலதன முதலீட்டினை (capital investment) அதிகரித்துக் கொள்வதற்கான அமையச் செலவாக அமைவது
   (1) நுகர்வில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (2) வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (3) சேமிப்பில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   (4) வட்டிவீதத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   (5) வெளியீட்டில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

3. "மாறுநிலைப் பொருளாதாரம்" (transition economy) என்பதனால் விபரிக்கப்படுவது
   (1) ஊழியச் செறிவுடைய முறைகளுக்குப் பதிலாக மூலதனச் செறிவுடைய முறைகளை கைக்கொள்ளும் ஒரு நாட்டையாகும்.
   (2) மத்திய திட்டமிடலிலிருந்து சந்தைமுறைமையை நோக்கி நகரும் ஒரு நாட்டையாகும்.
   (3) குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் வரிசையிலிருந்து நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் வரிசைக்கு நகரும் நாட்டையாகும்.
   (4) வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை நிலையிலிருந்து வர்த்தக நிலுவை மிகைநிலைக்கு மாறும் நாட்டையாகும்.
   (5) பாரம்பரியப் பொருளாதாரத்திலிருந்து மத்திய திட்டமிடற் பொருளாதாரமாக மாறும் ஒரு நாட்டையாகும்.

4. மத்திய திட்டமிடற் பொருளாதார முறைமையின் ஒரு முக்கிய பண்பாக அமைவது
   (1) வளஒதுக்கீடு சார்பு விலைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.
   (2) பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள தனியார் சொத்துரிமை காணப்படுவதாகும்.
   (3) பொருளாதாரத்தில் பொருள்களையும் சேவைகளையும் எவ்வாறு சிறப்பாக உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிய தீர்மானங்கள் அரசாங்க கொள்கை வகுப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதாகும்.
   (4) சந்தைப் பொருளாதார முறையைவிட அதிசிறந்த பொருளாதார வினைத்திறனை அடைவதாகும்.
   (5) வருமானம் மற்றும் செல்வம் என்பன மிகவும் சமமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதாகும்.


5. வரைபடமானது பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.




சமநிலைமட்ட வெளியீட்டிற்காக நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள மொத்த பண அளவினைக் காட்டும் பகுதி எது?
(1) 0QEP (2) 0TEQ (3) PEK (4) 0KM (5) 0KEQ

[பக். 2 ஐப் பார்க்க

6. வரைபடமானது X மற்றும் Y ஆகிய இரு நாடுகளின் உற்பத்தி இயல்தகவு வளையிகளைக் காட்டுகிறது.




இவ்விரு பொருளாதாரங்கள் தொடர்பில் சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது ?

(1) இரு பொருளாதாரங்களும் எப்போதும் சமமான அமையச் செலவைக் கொண்டுள்ளன.
(2) இரு பொருளாதாரங்களும் சமமான எதிர்கால வளர்ச்சிச் சாத்தியங்களைக் கொண்டுள்ளன.
(3) இரு பொருளாதாரங்களிலும் அமையச் செலவுகள் அதிகரிக்கின்றன.
(4) இரு பொருளாதாரங்களும் ஒருபோதும் ஒரே பொருட் சேர்க்கையினை உற்பத்தி செய்ய முடியாது.
(5) நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் X நாடு Y நாட்டை விட உயர்ந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது.

7. அட்டவணையானது ஐந்து கம்பனிகளின் உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் அவற்றின் நெருங்கிய பதிலீடுகளின் விலைகள் குறித்த குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி அளவுகளைக் காட்டுகிறது.

| கம்பனி | குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் |
|---|---|
| கம்பனி A | + 3.0 |
| கம்பனி B | + 2.5 |
| கம்பனி C | + 1.0 |
| கம்பனி D | + 0.8 |
| கம்பனி E | + 0.2 |

The National e-learning Portal for The General Education

இத்தரவுகளின் அடிப்படையில் மிக உயர்வான சந்தைச் சக்தியைச் (market power) கொண்டுள்ள கம்பனி எது ?

(1) கம்பனி A (2) கம்பனி B (3) கம்பனி C (4) கம்பனி D (5) கம்பனி E

8. நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடைவது

(1) நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
(2) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.
(3) கேள்வி நெகிழ்வற்ற நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
(4) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.
(5) கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.

9. X என்பது ஒரு இழிவுப் பொருளாயின், வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது அப்பொருளின்

(1) கேள்வியைக் குறைக்கும், விலையைக்குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.
(2) கேள்வியைக் குறைக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.
(3) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.
(4) நிரம்பலை அதிகரிக்கும், விலையைக் குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.
(5) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.

[பக். 3 ஐப் பார்க்க

15397



10. தோடம்பழங்களுக்கான சந்தை சமநிலையில் உள்ளதாகக் கருதுக. தோடம்பழங்களின் நிரம்பல் வீழ்ச்சியடையும் அதேவேளை அவற்றுக்கான கேள்வி அதிகரிக்குமாயின், சந்தையில் தோடம்பழங்களின் விலை மற்றும் தொகை பற்றி நீர் என்ன கூறமுடியும் ?
    (1) விலை, தொகை ஆகிய இரண்டுமே அதிகரிக்கும்.
    (2) விலை அதிகரிக்கும் ஆனால் தொகையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
    (3) விலை, தொகை ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடையும்.
    (4) தொகை அதிகரிக்கும் ஆனால் விலையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
    (5) கேள்வி, நிரம்பல் வளையிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றையொன்று ஈடுசெய்து விடுவதால் விலையும் தொகையும் மாறாதிருக்கும்.

11. சிகரட்டுக்களின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாக உள்ளதெனக் கருதுக. சிகரட் உற்பத்தி மீது கலால்வரி விதிக்கப்படுமாயின் அது பின்வருவனவற்றில் எவ்விதத்தில் விலை, தொகை மற்றும் சிகரட் மீதான நுகர்வோன் செலவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் ?

| | விலை | தொகை | நுகர்வோரின் செலவீடு |
|---|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | குறையும் | குறையும் | குறையும் |
| (3) | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| (4) | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

12. பிள்ளைகளை பகல் வேளைகளில் பராமரிக்கும் (daycare) நிலையங்களுக்கு அனுப்பும் செலவை ஈடுசெய்ய மானியமாகப் பயன்படுத்தக் கூடியவாறு ஒவ்வொரு பெற்றோருக்கும் அரசாங்கம் கூப்பன்களை வழங்குமாயின் பகல் வேளைகளில் பராமரிப்புச் சேவையினை வழங்கும் நிறுவனங்களின் சந்தையில் யாது நிகழுமென நீர் எதிர்பார்ப்பீர் ?
    (1) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி குறைவதோடு விலையும் வீழ்ச்சியடையும்.
    (2) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி அதிகரிப்பதோடு விலையும் அதிகரிக்கும்.
    (3) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் அதிகரிப்பதோடு அதன் விலை வீழ்ச்சியடையும்.
    (4) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் வீழ்ச்சியடையும் அதே வேளை விலை அதிகரிக்கும்.
    (5) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கு நிரந்தரமாக ஒரு பற்றாக்குறை நிலவும்.

13. நுகர்வோன் மிகை பூச்சியமாக மாறத் தேவையான நிபந்தனை எது ?
    (1) கேள்வி பூரண விலை நெகிழ்வுள்ளது.
    (2) கேள்வி பூரண விலை நெகிழ்வற்றது.
    (3) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளது.
    (4) நிரம்பல் பூரண நெகிழ்வற்றது.
    (5) கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது சார்பளவில் நிரம்பலின் விலை நெகிழ்ச்சியை விட உயர்வானது.

14. "சாதாரண பொருளொன்றின்" விலை மற்றும் சந்தையில் அதன் விற்பனைத் தொகை இரண்டிலுமே ஏக காலத்தில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக அமைவது.
    (1) பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த பயனுறுதிமிக்க உயர்ந்தபட்ச விலையானது நீக்கப்பட்டமை
    (2) பொருளின் உற்பத்தியில் ஏற்படும் தொழில் நுட்ப முன்னேற்றம்
    (3) பொருளின் மீது வரிவிதிக்கப்படல்
    (4) பொருள் உற்பத்தியாளர்களுக்கு மானியமொன்று வழங்கப்படல்
    (5) குறித்த பொருளின் பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி

15. ஊழியத்தின் எல்லை உற்பத்தியானது ஊழியத்தின் சராசரி உற்பத்திக்குச் சமனாகும் போது
    (1) ஊழியத்தின் எல்லை உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
    (2) உற்பத்தியின் எல்லைச் செலவு உச்சத்திலிருக்கும்.
    (3) எல்லைச் செலவானது சராசரி மாறும் செலவின் அதிகுறைந்த மட்டத்திற்குச் சமனாகும்.
    (4) சராசரி மொத்தச் செலவு அதிகுறைந்த மட்டத்திலிருக்கும்.
    (5) ஊழியத்தின் மொத்த உற்பத்தி அதன் உச்சத்திலிருக்கும்.

16. நிறுவனமொன்று தனது ஊழியப்படையை 100 இலிருந்து 101 தொழிலாளர்களாக அதிகரிக்கும்போது அதன் நாளாந்தக் கூலியினை ரூபா 600 இலிருந்து ரூபா 650 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்நிலைமையின் கீழ் ஊழியத்தின் நாளொன்றுக்கான எல்லைச் செலவு
    (1) ரூபா 50 ஆகும். (2) ரூபா 650 ஆகும். (3) ரூபா 5 650 ஆகும்.
    (4) ரூபா 60 000 ஆகும். (5) ரூபா 65 650 ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

17. நிறுவனமொன்று ஒரு வருட காலப்பகுதியில் பின்வரும் செலவுகளை மேற்கொண்டதாக பொருளியலாளரொருவர் கணிப்பீடு செய்கிறார்.

| செலவு வகை | செலவு (ஆயிரம் ரூபாயில்) |
|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | 150 |
| உரிமையாளரின் நேரத்தின் அமையச்செலவு | 40 |
| உற்பத்தி உள்ளீட்டுப் பொருள்கள் | 80 |
| வாடகை | 30 |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 20 |
| வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 25 |
| உரிமையாளர் வழங்கிய நிதிக்காக இழந்தவட்டி வருவாய் | 15 |

இத்தகவல்களின் அடிப்படையில்,
கணக்கியலாளரொருவரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவைவிட பொருளியலாளரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவு எந்த அளவினால் கூடுதலாக இருக்கும் ?

(1) ரூபா 30 500 (2) ரூபா 55 000 (3) ரூபா 85 000
(4) ரூபா 305 000 (5) ரூபா 360 000

18. **A** என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 250 இலிருந்து 200 ஆகக் குறைக்கிறது. இதன் விளைவாக அதன் வெளியீடானது நாளொன்றுக்கு 5 000 அலகுகளிலிருந்து 4 800 அலகுகளாக வீழ்ச்சியடைகிறது. **B** என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 800 இலிருந்து 1 000 ஆக அதிகரிக்கிறது. இதன் விளைவாக நிறுவனத்தின் வெளியீடு நாளொன்றுக்கு 2 000 அலகுகளிலிருந்து 2 200 அலகுகளாக அதிகரிக்கிறது. இவ்விரு நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களின் ஊழிய உற்பத்தித்திறனில் எத்தகைய மாற்றம் ஏற்படும் ?

| | நிறுவனம் A யின் உற்பத்தித்திறன் | நிறுவனம் B யின் உற்பத்தித்திறன் |
|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | அதிகரிக்கும் | மாறாதிருக்கும் |

19. ஒரு கைத்தொழில் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டிருப்பதோடு ஒவ்வொரு நிறுவனமும் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்கின்றது. இந்நிலையில் ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனமும் கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியை எதிர்நோக்குமாயின் அதனை பின்வருவனவற்றில் எது விளக்கக் கூடும் ?

(1) எல்லா நிறுவனங்களும் விலையை ஏற்போராகத் தொழிற்படுகின்றன.
(2) பிரவேச மற்றும் வெளியேற்ற சுதந்திரம்.
(3) உற்பத்தி வளங்கள் பூரண அசைவுள்ளன.
(4) நுகர்வோர் செலவிடுவதற்காகக் கிடைக்கும் பணத்தொகை வரையறைக்குட்பட்டிருத்தல்.
(5) நுகர்வோரின் சந்தைபற்றிய அறிவு பூரணமற்றிருத்தல்.

20. நிறைபோட்டி நிறுவனமொன்று வாராந்தம் 200 அரிசிப் பொதிகளை உற்பத்தி செய்கிறது. இவை ஒவ்வொன்றும் ரூபா 250 விலைக்கு விற்கப்படுகின்றன. நிறுவனத்தின் செலவுகளை அட்டவணை காட்டுகிறது.

| வகை | செலவு (ரூபா) |
|---|---|
| மொத்த நிலையான செலவு | 20 000 |
| மொத்த மாறுஞ் செலவு | 40 000 |
| எல்லைச் செலவு | 250 |

குறுங்காலத்தில் இந்நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டத்தை இழிவு படுத்த யாது செய்ய வேண்டும் ?

(1) உற்பத்தியை முற்றாக நிறுத்த வேண்டும்.
(2) உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
(3) உற்பத்தியை குறைக்க வேண்டும்.
(4) விலையைக் குறைக்க வேண்டும்.
(5) உற்பத்தியைத் தற்போதைய மட்டத்தில் பேண வேண்டும்.

[பக். 5 ஐப் பார்க்க


21. பின்வருவனவற்றில் மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தியின் அளவில் பாதிப்பை **ஏற்படுத்தாதது** எது ?
   (1) நுகர்வோனொருவன் தனது தனிப்பட்ட உபயோகத்திற்காக புதிய மோட்டார் வண்டியொன்றை கொள்வனவு செய்தல்
   (2) அரசாங்கம் தனது பாதுகாப்பு கற்கை நிறுவனத்திற்காக புதிய பேருந்து வண்டியொன்றைக் கொள்வனவு செய்தல்
   (3) நுகர்வோனொருவன் சிகையலங்கார சேவையினைப் பெற்றுக் கொள்ளல்
   (4) ஒரு முதலீட்டாளன் அரியவகை ஓவியமொன்றை ஏலத்தில் கொள்வனவு செய்தல்
   (5) ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலைக்காக புதிய மின்பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்தல்

22. பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு ரூபா 400 எனவும் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவுங் கொள்க. செலவிடத்தக்க வருமானம் ரூபா 1 200 வினால் அதிகரிக்குமாயின் நுகர்வுச் செலவீடு அதிகரிக்கும் அளவு
   (1) ரூபா 1 600 ஆகும். (2) ரூபா 1 360 ஆகும். (3) ரூபா 1 200 ஆகும்.
   (4) ரூபா 960 ஆகும். (5) ரூபா 400 ஆகும்.

23. தொகை வரியினை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.25 ஆகக் காணப்படுமாயின் அரசாங்க செலவீட்டில் ஏற்படும் ரூபா 80 பில்லியன் அதிகரிப்பானது வெளியீட்டில் ஏற்படுத்தக் கூடிய உச்ச அதிகரிப்பினளவு
   (1) ரூபா 80 பில்லியனாகும்.
   (2) ரூபா 80.25 பில்லியனாகும்.
   (3) ரூபா 160 பில்லியனாகும்.
   (4) ரூபா 240 பில்லியனாகும்.
   (5) ரூபா 320 பில்லியனாகும்.

24. அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் நுகர்வுச்சார்பு $C = 30 + 0.7Y$ ஆகவுள்ளது. (இங்கு C என்பது நுகர்வாகும், Y என்பது வருமானமாகும்.) சமநிலை வருமான மட்டம் ரூபா 300 மில்லியனாக இருப்பின் முதலீட்டு மட்டத்தின் அளவு
   (1) ரூபா 60 மில்லியனாகும். (2) ரூபா 100 மில்லியனாகும். (3) ரூபா 210 மில்லியனாகும்.
   (4) ரூபா 240 மில்லியனாகும். (5) ரூபா 300 மில்லியனாகும்.

25. பின்வரும் வரைபடம் அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் சேமிப்பு மற்றும் முதலீட்டு வளையிகளைக் காட்டுகிறது.




வெளியீட்டின் சாத்தியவள மட்டம் $Y_p$ யாகும். எனவே சாத்தியவள வெளியீட்டிற்கும் உண்மையான வெளியீட்டிற்கும் இடையிலான இடைவெளியானது
   (1) LG இனால் அளவிடப்படும்.
   (2) GH இனால் அளவிடப்படும்.
   (3) JH இனால் அளவிடப்படும்.
   (4) KJ இனால் அளவிடப்படும்.
   (5) HK இனால் அளவிடப்படும்.

26. குறித்த ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் நுகர்வு, முதலீடு, மற்றும் அரச கொள்வனவுகள் என்பவற்றின் மீதான செலவீடுகள் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 103 சதவீதமாகக் காணப்பட்டன. இந்நிலை சாத்தியமாவது
   (1) பணநிரம்பல் அதிகரிக்கப்பட்டால் மட்டுமேயாகும்.
   (2) தேறிய ஏற்றுமதிகள் நேர்க்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.
   (3) தேறிய ஏற்றுமதிகள் எதிர்க்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.
   (4) அரசாங்கம் பாதீட்டில் ஒரு மிகைநிலையினைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.
   (5) அரசாங்கம் சமநிலைப் பாதீட்டைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

27. வங்கி முறைமையானது ஒரேயொருவங்கியை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றைக் கருதுக. இவ்வங்கியானது 10% காசொதுக்கு வீதத்தைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ரூபா 10 000 பணத்தை வைப்பில் இடுகின்றனர். புழக்கத்திலுள்ள தாள் குற்றி நாணயங்களின் அளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை எனக் கருதினால் இவ்வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்ச அளவு யாது ?

(1) ரூபா 1 000 ஆகும். (2) ரூபா 9 000 ஆகும். (3) ரூபா 10 000 ஆகும்.
(4) ரூபா 90 000 ஆகும். (5) ரூபா 100 000 ஆகும்.

28. கெயின்ஸியக் கோட்பாட்டின்படி பின்வருவனவற்றில் எச்சந்தர்ப்பத்தில் பணத்திற்கான கேள்வியில் ஒரு அதிகரிப்பு ஏற்படும் ?

| | மெய்வருமானம் | விலை மட்டம் | வட்டி வீதம் |
|---|---|---|---|
| (1) | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (2) | மாறாது | மாறாது | அதிகரிப்பு |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (4) | மாறாது | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (5) | வீழ்ச்சி | மாறாது | அதிகரிப்பு |

29. பொருளாதாரமானது நிறைதொழில் மட்டத்தில் உள்ளதாகக் கருதுக. கொள்கை வகுப்பாளர்கள் விலை மட்டத்தை உறுதியாகப் பேண விரும்பும் அதேவேளை முதலீட்டைப் பெருமளவு ஊக்குவிக்க விரும்புகின்றனர். இக்குறிக்கோளை அடைவதற்கு இறைக்கொள்கை மற்றும் பணக்கொள்கை என்பவற்றின் பின்வரும் சேர்க்கைகளில் மிகவும் பொருத்தமானது எது ?

| | பணக்கொள்கை | இறைக்கொள்கை |
|---|---|---|
| (1) | மாற்றமில்லை | சுருக்கம் |
| (2) | விரிவாக்கம் | மாற்றமில்லை |
| (3) | விரிவாக்கம் | சுருக்கம் |
| (4) | விரிவாக்கம் | விரிவாக்கம் |
| (5) | சுருக்கம் | விரிவாக்கம் |

30. பின்வரும் கொள்கைத் தெரிவுகளில் எது பொருளாதாரத்தைப் பின்னடைவிலிருந்து (recession) மீட்சியடையச் செய்ய வடிவமைக்கப்பட்ட பணக்கொள்கை மற்றும் இறைக்கொள்கைச் சேர்க்கையினைப் பிரதிபலிக்கிறது ?

(1) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் குறைத்தல்
(2) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் அதிகரித்தல்
(3) அரச செலவினங்களை அதிகரிப்பதுடன் மத்திய வங்கி வட்டிவீதங்களைக் குறைத்தல்
(4) வரிகள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் ஆகிய இரண்டையும் குறைத்தல்
(5) குறைநிலை பாதீட்டை மேற்கொள்வதுடன் பிணையங்களை திறந்த சந்தையில் விற்பனை செய்தல்

31. பொருளாதாரமொன்றில் வெளியீட்டின் அளவு வருடாந்தம் 2% இனால் அதிகரிக்கும் அதேவேளை பணத்தின் அளவு 5% இனால் உயர்கிறது. பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் மாறாதாயின் விலை மட்டத்தில் ஏற்படும் அண்ணளவான அதிகரிப்பு யாது ? தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதியின் அதிகரிப்பு யாது ?

| | விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு | தேசியவெளியீட்டின் பணப்பெறுமதியின் அதிகரிப்பு |
|---|---|---|
| (1) | 2% | 5% |
| (2) | 2% | 7% |
| (3) | 2.5% | 10% |
| (4) | 3% | 5% |
| (5) | 3% | 7% |

32. பின்வரும் அட்டவணையானது பொருளாதாரமொன்றின் 2008 - 2012 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதிக்கான சுட்டெண்களைத் தருகிறது.

| ஆண்டு | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதி GDP |
|---|---|
| 2008 | 100 |
| 2009 | 96 |
| 2010 | 90 |
| 2011 | 85 |
| 2012 | 83 |

[பக். 7 ஐப் பார்க்க

மேற்படி தரவுகளிலிருந்து 2008 - 2012 காலப்பகுதியில் எந்தமாறியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக முடிவு செய்யலாம் ?

(1) மொத்தக் கேள்வி
(2) மெய் வெளியீடு
(3) பணவீக்க வீதம்
(4) அரசாங்கத்தின் பாதீட்டுக் குறைநிலை
(5) வர்த்தக நிலுவையின் குறைநிலை

33. புதிய புகையிரத மார்க்கமொன்றை உருவாக்குவதனால் ஏற்படும் பின்வரும் விளைவுகளில் எதனை நேர்க்கணிய வெளிவாரியாக கருதலாம் ?
(1) சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) புகையிரதத் திணைக்களத்தின் இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு
(3) குறித்த மார்க்கத்தில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்படும் வருவாய் அதிகரிப்பு
(4) குறித்த மார்க்கத்தில் பயணிப்பதனால் பயணிகளின் பயணநேர மீதப்படுத்தல்
(5) குறித்த மார்க்கத்திற்கு அருகே அமைந்துள்ள மெய்ச் சொத்துக்களின் பெறுமதி குறைதல்

34. ஒரு "மேன்மைப் பொருள்" என்பது
(1) ஒவ்வொருவரினதும் தகைமையின் அடிப்படையில் நுகர்வோருக்கு வழங்கப்படும் பொருளாகும்.
(2) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் மிகச் சிறியளவே கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
(3) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் தேவைப்படும் அளவைவிட மிக அதிகமான அளவில் கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
(4) பொருளை நுகர்வதனால் ஒரு நுகர்வோன் பெறும் நன்மையினை எல்லா நுகர்வோருக்கும் விரிவாக்கம் செய்யப்படத்தக்க பொருளாகும்.
(5) பொருளை நுகர்வதனால் பெறப்படும் தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள பொருளாகும்.

35. குறைந்து செல்லும் வரி (regressive tax) முறையின் வரைவிலக்கணமாக அமைவது
(1) எல்லா வரி இறுப்பாளர்களும் தமது வருமானங்களின் முழுத் தொகையின் சமமான அளவுகளை வரியாகச் செலுத்துவர்
(2) குறைந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் குறைவான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்
(3) உயர்ந்த வருமானப் பெறுவோர், குறைந்த வருமானம் பெறுபவர்களைவிடக் குறைவான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
(4) உயர்ந்த வருமானம் பெறுவோர் குறைந்த வருமானம் பெறுவோரைவிட அதிகமான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
(5) வரிச்சுமையானது பின்னோக்கி நகர்த்தப்படலாம்.

36. பின்வரும் அட்டவணையானது **A** மற்றும் **B** ஆகிய இரு நாடுகள் ஓரலகு வளச்சேர்க்கையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய **X** மற்றும் **Y** ஆகிய இரு பொருள்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.

| பொருள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| X | 100 | 300 |
| Y | 200 | 400 |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடையுமாயின் வர்த்தகத்தின் மூலம் நன்மையடைய இரு நாடுகளுக்கும் பொருத்தமான பரிமாற்ற வீதமாக அமைவது
(1) 1 X = 1 Y (2) 1 X = 1.3 Y (3) 1 X = 1.5 Y (4) 1 X = 2 Y (5) 1 X = 3 Y

37. இலங்கையிலுள்ள உற்பத்தி நிறுவனமொன்று ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நிறுவனமொன்றிற்கு 10 மில்லியன் டொலர் பெறுமதியான டயர்களை ஏற்றுமதி செய்கிறது.
இரட்டைப்பதிவு அடிப்படையில் கணக்குப்பதிவை மேற்கொள்ளும்போது இக் கொடுக்கல் வாங்கலினால் சென்மதி நிலுவைக் கணக்குகளின் எந்த இரு கணக்குகளில் தாக்கங்கள் ஏற்படும் ?
(1) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் மூலதனக் கணக்கின் மூலதன மாற்றல்கள்
(2) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நடைமுறைக்கணக்கின் வருமானங்கள்
(3) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நிதிக்கணக்கின் சொத்தொதுக்குகள்
(4) நிதிக்கணக்கின் பொறுப்புகள் மற்றும் நிதிக்கணக்கின் வதியாதோர் சொத்துகள்
(5) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நிதிக்கணக்கின் வதியாதோர் மீதான உரிமைகள்

[பக். 8 ஐப் பார்க்க

38. நாடொன்றின் புள்ளி விபரத் திணைக்களம் தனது சென்மதி நிலுவைக் கணக்கின் இறுதி வடிவத்தினை முன்வைக்க விரும்புகிறது. அது நடைமுறைக்கணக்கு நிலுவை, மூலதனக் கணக்கு நிலுவை, மற்றும் நிதிக்கணக்கு நிலுவை என்பவற்றைக் கணிப்பீடு செய்துள்ளது. திணைக்களத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் மேலதிக தகவல் எது ?

(1) வெளிநாட்டு நாணய ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றம்
(2) வெளிநாட்டு உதவி
(3) வழுக்களும் விடுபாடுகளும்
(4) உத்தேச நோக்க நாணயப்பாய்ச்சல்
(5) பட்டியலிடப்பட்ட முதலீடுகளில் ஏற்படும் மாற்றம்

39. நாடொன்றின் வர்த்தக மாற்று விகிதம் தற்போது 150 (அடிப்படையாண்டு 2010 = 100) ஆகவுள்ளது. 2010 இலிருந்து நாடு அதன் ஏற்றுமதிகளுக்காகப் பெற்ற சராசரி விலைகள் 20% இனால் அதிகரித்தன. எனவே இந்நாடு தனது இறக்குமதிகளுக்குச் செலுத்திய விலைகள் மாற்றமடைந்திருக்க வேண்டியது

(1) – 50% இனாலாகும்.
(2) – 25% இனாலாகும்.
(3) – 20% இனாலாகும்.
(4) + 20% இனாலாகும்.
(5) + 25% இனாலாகும்.

40. ஐக்கிய அமெரிக்காவில் நகர்வோர் கொள்வனவுகளை பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய தெரிவுசெய்யப்பட்ட ஒரு கூடைப் பொருள்கள் $ 120 விலையுடையன. இதே கூடையில் உள்ளடங்கும் பொருள்கள் இலங்கையில் ரூபா 9 600 விலையுடையதாகக் காணப்படுகின்றன. இதிலிருந்து நாம் உய்த்தறியக் கூடியது

(1) ரூபா 25% மிகைமதிப்புடையதாக உள்ளது.
(2) ரூபா 25% குறைமதிப்புடையதாக உள்ளது.
(3) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் டொலரொன்றுக்கு ரூபா 96 ஆகும்.
(4) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் டொலரொன்றுக்கு ரூபா 80 ஆகும்.
(5) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் ரூபாவொன்றுக்கு $ 0.10 டொலராகும்.

41. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடானது

(1) உள்ளூர் கூலிமட்டங்களில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(2) இப்பொருளாதாரங்களின் வரி வருவாய்களில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(3) உள்ளூர் வாசிகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள நுகர்வுப் பொருள்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(4) வெளிநாட்டு முதலீடுகளில் இருந்து பெறப்படும் தேறிய வருமானப் பாய்ச்சல்களில் ஒரு பாதகமான நிலையை ஏற்படுத்தலாம்.
(5) சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கின் ஒரு பாதகமான நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

42. நாடொன்றில் தலைக்குரிய வருமானமட்டம் சார்பளவில் குறைவாக உள்ளபோது, அதனோடு இணைந்ததாக பொதுவாக அவதானிக்கப்படுவது

(1) ஓர் உயர் வீதத்திலான சேமிப்பு
(2) ஒரு குறைந்த வீதத்திலான பொருளாதார வளர்ச்சி
(3) ஒரு குறைந்த வீதத்திலான பணவீக்கம்
(4) ஒரு குறைந்த வீதத்திலான சனத்தொகை வளர்ச்சி
(5) ஓர் உயர் வீதத்திலான தொழில்வாய்ப்பு

43. மிகத் துரிதமான பொருளாதார வளர்ச்சியினை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல ஒரு காரணிச் சேர்க்கையாக அமைவது

(1) தொழில் வாய்ப்புகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் சென்மதி நிலுவையில் குறை நிலை அதிகரிப்பும்.
(2) முதலீட்டு மட்டம் மற்றும் தொழில்புரியும் சனத்தொகையின் அளவு என்பவற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(3) வருமானம் சமமாகப் பகிரப்படுவதுடன் மாற்றல் செலுத்தல்கள் உயர்மட்டத்தில் இருத்தல்
(4) பணவீக்கம் துரிதமடைதல் மற்றும் தேசிய கடன்கள் அதிகரித்தல்
(5) வெளிநாட்டு நேரடி முதலீடும் வட்டி வீதமும் அதிகரித்தல்

[பக். 9 ஐப் பார்க்க

44. பின்வரும் அட்டவணையானது தரப்பட்ட ஆண்டொன்றில் A, B, C, D மற்றும் E ஆகிய நாடுகளின் நுகர்வு, மொத்த மூலதனவாக்கம் மற்றும் பெறுமானத் தேய்வு பற்றிய புள்ளிவிபரங்களை காட்டுகிறது. (புள்ளிவிபரங்கள் யாவும் மில்லியன் அமெரிக்க டொலரில் கணிக்கப்பட்டுள்ளன.)

| நாடு | நுகர்வு | மொத்த மூலதனவாக்கம் | பெறுமானத்தேய்வு |
|---|---|---|---|
| A | 200 | 40 | 50 |
| B | 500 | 200 | 150 |
| C | 1 000 | 1 200 | 1 400 |
| D | 5 000 | 6 000 | 6 000 |
| E | 10 000 | 8 000 | 8 200 |

இந்நாடுகளின் தொழில் நுட்பம் தரப்பட்டதாகவும் மாறாமலும் உள்ள நிலையில் மேற்படி தகவல்களுக்கமைய பொருளாதார வளர்ச்சியினைப் பெரும்பாலும் அனுபவிக்கக் கூடிய நாடு எது ?

(1) A (2) B (3) C (4) D (5) E

45. "நிரம்பல் பக்கப் பொருளியற் கொள்கைகள்" என்பதனால் பொதுவாக விளங்கிக் கொள்ளப்படுவது

(1) உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் சந்தைநிறைவின்மைகளை (imperfections) குறைக்கும் கொள்கைகளாகும்.
(2) அரசாங்கத்திற்கு இயலுமானளவு பொருள்களையும் சேவைகளையும் வழங்கக்கூடிய ஆற்றலை வழங்கும் கொள்கையாகும்.
(3) வேலையின்மைப் பிரச்சினையை குறைந்த மட்டத்தில் வைத்திருக்கும் பொருட்டு ஊழிய நிரம்பலை குறைக்கும் கொள்கைகளாகும்.
(4) வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதனூடாக பணவீக்கத்தைக் குறைக்கும் கொள்கைகளாகும்.
(5) மொத்தக் கேள்வியை அதிகரிக்கும் கொள்கைகளாகும்.

46. பின்வரும் அட்டவணையானது 2000 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பொருளாதாரமொன்றின் மொத்தவருமானம் பல்வேறு வருமானக் குழுக்கள் மத்தியில் பங்கிடப்பட்ட விதத்தைக் காட்டுகிறது

| வருமான வகுப்பு | மொத்த வருமானப் பங்கின் சதவீதம் | |
|---|---|---|
| | 2000 | 2010 |
| அதிகுறைந்த 10% | 4.1 | 2.5 |
| அதிகுறைந்த 20% | 9.8 | 6.8 |
| அதிகுறைந்த 30% | 16.0 | 12.0 |
| அதிஉயர்ந்த 30% | 47.0 | 54.0 |
| அதிஉயர்ந்த 20% | 35.0 | 41.0 |
| அதிஉயர்ந்த 10% | 20.0 | 26.0 |

மேற்படி தரவுகளிலிருந்து கருதப்படும் காலப்பகுதி தொடர்பாக மேற்கொள்ளக் கூடிய முடிவு

(1) அதிகுறைந்த வருமானக் குழுக்கள் தமது வருமானங்களில் ஒரு வீழ்ச்சியை அனுபவித்துள்ளன என்பதாகும்.
(2) வருமானப் பங்கீடு மிகவும் சமமற்றதாக மாறியுள்ளது என்பதாகும்.
(3) செல்வப்பங்கீடு மிகவும் சமமற்றதாக மாறியுள்ளது என்பதாகும்.
(4) மொத்தவருமானம் அதிகரித்துள்ளதால் ஒவ்வொருவரும் நன்மையடைந்துள்ளனர் என்பதாகும்.
(5) கினி குணகம் குறைவடைந்துள்ளது என்பதாகும்.

47. ஒரு நாடு அபிவிருத்தியை அனுபவித்துள்ளது என்பதைப் பின்வருவனவற்றில் எம்மாற்றம் சிறப்பாக வெளிப்படுத்துகிறது ?

(1) சராசரிப் பிரசையொருவரின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்.
(2) நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(3) நாட்டின் வர்த்தக நிலுவையில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்.
(4) நாட்டின் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
(5) வளர்ந்தோர் எழுத்தறிவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

[பக். 10 ஐப் பார்க்க

48. அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான சிறந்த கொள்கையாக "உதவியல்ல வர்த்தகமே தேவை" (trade not aid) என்பதை பொருளியலாளர்கள் விதந்துரைத்துள்ளனர். இக் கொள்கை முன்மொழிவின் கருத்து

(1) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு உதவியில் தங்கியிராமல் சுயதேவைப் பூர்த்தியடைய வேண்டும் என்பதாகும்.

(2) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சந்தைகளில் பிரவேசிப்பதற்கு அதிக வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

(3) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு உதவியை தமது ஏற்றுமதிக் கைத்தொழில்களில் முதலீடு செய்ய வேண்டும் என்பதாகும்.

(4) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டை ஊக்குவிப்பதற்காக வர்த்தகத் தடைகளைப் பிரயோகிக்க வேண்டும் என்பதாகும்.

(5) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் வர்த்தக நிலுவையில் ஒரு மிகைநிலையை அடைவதன் மூலம் அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும் என்பதாகும்.

49. **X** என்னும் நாட்டின் குடித்தொகை பற்றிய சில தரவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன

| வகை | எண்ணிக்கை (மில்லியனில்) |
|---|---|
| மொத்த சனத்தொகை | 180 |
| 10 வயதும் அதற்குக் கூடியதுமான சனத்தொகை | 150 |
| தொழில்புரியும் சனத்தொகை | 81 |
| தொழிலற்ற சனத்தொகை | 09 |
| பொருளாதாரரீதியில் செயலற்ற சனத்தொகை | 60 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் **X** நாட்டின் தொழிலின்மை வீதம் மற்றும் தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் என்பன முறையே காட்டப்பட்டுள்ள விடை எது ?

| | தொழிலின்மை வீதம் | தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் |
|---|---|---|
| (1) | 10.00% | 60.60% |
| (2) | 10.00% | 53.33% |
| (3) | 6.66% | 50,00% |
| (4) | 5.55% | 50.00% |
| (5) | 5.65% | 33.33% |

50. தரப்பட்ட பொருளாதாரமொன்றில் பத்துவருட காலப்பகுதியில் தொழில்வாய்ப்புகள், மற்றும் தொழிலின்மை ஆகிய இரண்டுமே அதிகரித்தன. இந்நிலைமை பின்வருவனவற்றில் எதில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக உருவாகியிருக்கும் ?

(1) பிறப்பு வீதம்

(2) பொருளாதார ரீதியில் செயற்படும் சனத்தொகை

(3) ஆயுள் எதிர்பார்க்கை

(4) தங்கியிருப்போர் சதவீதம்

(5) வெளிநோக்கிய குடிப்பெயர்வு

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* உபபிரிவு **'அ'**, உபபிரிவு **'ஆ'** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவு செய்க.)

**1.** (i) மூலதனம் மற்றும் மனித மூலதனம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடென்ன ? (04 புள்ளிகள்)

(ii) பணமானது எவ்வழிகளில் சிறப்புத் தேர்ச்சி மற்றும் தொழிற்பிரிப்பு என்பவற்றை ஊக்குவிக்கிறது ? (04 புள்ளிகள்)

(iii) சந்தை முறைமையும், கட்டளைப் பொருளாதாரமும் அருமை என்னும் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரத்தில் வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டுமாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் எவை ? (04 புள்ளிகள்)

(v) பொருளாதாரத்தின் சிற்றினப் பொருளியல் மற்றும் பேரினப் பொருளியல் பிரச்சினைகளை விளக்க உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தலாம் ? (04 புள்ளிகள்)

**2.** (i) சந்தை விலைகளின் சமிக்ஞை வழங்கும் தொழிற்பாட்டையும் பங்கீடு செய்யும் தொழிற்பாட்டையும் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் உற்பத்தியொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் **விலை தவிர்ந்த நான்கு** காரணிகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) குறித்த பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் அட்டவணை பற்றிய சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன

| விலை (ரூபா) | கேள்வித்தொகை ($Q_d$) | நிரம்பல்தொகை ($Q_s$) |
|---|---|---|
| 4 | 84 | 12 |
| 8 | 68 | 44 |

கேள்வி, நிரம்பல் வளையிகள் நேர்கோடுகள் எனக்கருதி, சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றின் சமன்பாடுகளைப் பெறுக. (04 புள்ளிகள்)

(iv) கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைப் பயன்படுத்தி, சமநிலை விலை மற்றும் தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) அரசாங்கம் அலகொன்றிற்கு ரூபா 3 வீதம் அலகு வரியொன்றை விதிக்குமாயின், வரியின் பின்பு உற்பத்தியாளர் பெறும் விலையினையும், அரசாங்கத்தின் வரி வருவாயையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**3.** (i) குறைந்து செல்லும் விளைவு விதியும், அளவுத்திட்ட விளைவு விதியும் நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) நிறுவனமொன்றின் எல்லைச் செலவு வளையிக்கும் அந்நிறுவனம் உள்ளடங்கும் கைத்தொழிலின் நிரம்பல் வளையிக்கும் இடையில் ஏதேனும் ஒரு தொடர்பு காணப்படுகிறதா என்பதைக் கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டிக் கைத்தொழில் ஒன்று கீழ் நோக்கிச் சரியும் கேள்வி வளையியை எதிர்நோக்கும் அதேவேளை நிறைபோட்டியின் கீழ் இயங்கும் நிறுவனமொன்று கிடையச்சுக்கு சமாந்தரமான கேள்வி வளையியை எதிர் கொள்வது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

(iv) குறுங்காலத்தில் இயங்கும் நிறுவனமொன்றின் மொத்த வருவாய் ரூபா 100 மில்லியனாகவும் மொத்தச் செலவு ரூபா 120 மில்லியனாகவும் மொத்த நிலையான செலவு ரூபா 40 மில்லியனாகவும் உள்ளது. இந்நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமா ? ஏன் ? (04 புள்ளிகள்)

(v) எல்லாச் சந்தை அமைப்புகளிலும் இலாப உச்சப்படுத்தலுக்கு எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படுவது ஏன் அத்தியாவசியமானது ? தொழிலானது நிறைபோட்டித் தன்மை வாய்ந்ததாக உள்ளபோது எல்லை வருவாய் = எல்லை செலவு (MR = MC) என்ற நிபந்தனையில் எல்லை வருவாய்க்குப் (MR) பதிலாக ஏன் விலை (P) பிரதியீடு செய்யப்படலாம் என விளக்குக. (04 புள்ளிகள்)

**4.** (i) கையிருப்பு மாற்றங்கள் (changes in inventory) என்பதனால் நீர் கருதுவதென்ன ? கையிருப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் முதலீட்டுச் செலவினத்தின் ஒரு கூறாக உள்ளடக்கப்படுவதேன் ? (04 புள்ளிகள்)

(ii) அரசாங்கத்தின் வட்டிச் செலுத்தல்கள் தனியார் வருமானத்தின் (personal income) ஒரு கூறாகக் கருதப்படும் அதேவேளை தேசிய வருமானத்தின் ஒரு கூறாகக் **கருதப்படாததேன்** ? (04 புள்ளிகள்)

(iii) "தனது மொத்தத் தேசிய வருமானத்தை விடக்கூடுதலாக செலவு செய்யும் ஒரு நாடு அதன் வர்த்தக நிலுவையில் ஒரு குறை நிலையினைக் கட்டாயம் கொண்டிருக்கும்."
இக்கூற்றின் மீது கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரமொன்றின் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன. (இலக்கங்கள் மில்லியன் ரூபாயில்)

| | | |
|---|---|---|
| தேசிய வருமானம் (Y) | = | 5 200 |
| செலவிடத்தக்க வருமானம் ($Y_d$) | = | 4 400 |
| நுகர்வு (C) | = | 4 100 |
| பாதீட்டுக் குறைநிலை (BD) | = | 150 |
| வர்த்தக நிலுவைக் குறைநிலை | = | 110 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி
(அ) அரச கொள்வனவுகளின் பெறுமதி (G)
(ஆ) சேமிப்பு (S)
(இ) முதலீடு (I) என்பவற்றைக் கணிப்பிடுக.
(04 புள்ளிகள்)

(v) "மறைந்திருக்கும் பொருளாதாரம் (underground economy)" என்றால் என்ன ? அதன் அளவினை எவ்வாறு குறைக்கலாம் ? (04 புள்ளிகள்)

**5.** (i) "முதலீட்டுப் பெருக்கி" என்பதன் கருத்தைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) "பணவீக்க இடைவெளியையும் (inflationary gap)" "சுருக்க இடைவெளியையும் (recessionary gap)" வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) வருமானமட்ட நிர்ணயம் பற்றிய எளிமையான வருமான-செலவீட்டு மாதிரி, பொருளாதாரமானது **ஒன்றில்** பணவீக்கம் **அல்லது** வேலையின்மை கொண்ட நிலையிலோ **அல்லது** இவையிரண்டும் அற்ற நிலையிலோ சமநிலையடையலாம் என்பதைக் காட்டுகிறது. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப் பகுதியொன்றில் முதலீடு 100 ஆகவும் அரச கொள்வனவுகள் 75 ஆகவும், தேறிய வரிகள் 100 ஆகவும், நுகர்வு $C = 25 + 0.8Y_d$ என்னும் சார்பினாலும் தரப்படுவதாகக் கொள்க.
இங்கு $Y_d$ செலவிடத்தக்க வருமானம் ஆகும்.
(அ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கி மற்றும் வரிப்பெருக்கி என்பவற்றின் பெறுமானங்களைக் கணிப்பிடுக ? (04 புள்ளிகள்)
(ஆ) இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் மட்டம் 1 000 ஆகக் கொள்க. நிறைதொழில் மட்ட வெளியீட்டை அடைய அரசாங்க செலவீடு எந்தளவால் அதிகரிக்கப்பட வேண்டும் ? மாறாக வரி அறவீட்டை எந்தளவால் குறைத்தால் நிறைதொழில் மட்டத்தை அடையப் போதுமானதாக இருக்கும் ? (04 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவு செய்க.)

**6.** (i) "உயர்வலுப்பணம்" என்பதனால் கருதப்படுவதென்ன ? மத்தியவங்கியினால் எவ்வாறு உயர்வலுப்பணம் உருவாக்கப்படலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பொருளாதாரமொன்றின் பண நிரம்பலை நிர்ணயிக்குங் காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நிதி முறைமையினுள் உள்ளடங்கும் நிறுவனங்களின் பிரதான வகைகள் (categories) யாவை ? (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் (M) ரூபா 1 200 பில்லியன் எனவும் மொத்த வங்கிவைப்புகள் (D) ரூபா 800 பில்லியன் எனவும், தேவைப்படும் ஒதுக்கு - வைப்பு வீதம் 10% எனவும் வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேணவில்லை எனவுங் கொள்க.

(அ) இப்பொருளாதாரத்தின் பணப் பெருக்கியின் பெறுமானம் யாது ?

(ஆ) மத்தியவங்கியானது ரூபா 3 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின், அதன் காரணமாக பணநிரம்பல் மாற்றமடையக் கூடிய உச்ச அளவு யாது ?

(04 புள்ளிகள்)

(v) "நாணயக் கணியக் கோட்பாடு" பற்றிய சுருக்கமான விளக்கமொன்றை முன்வைக்குக. அதன் எடுகோள்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

7. (i) வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதில் சந்தைகள் ஏன் தோல்வியடையலாம் ? (04 புள்ளிகள்)

(ii) பொருத்தமான வரைபடத்தின் உதவியுடன் இலங்கையின் சாலைகளில் சமூகரீதியில் விரும்பத்தக்க எண்ணிக்கையை விட மிக அதிகமான மோட்டார் வாகனங்கள் காணப்படுவது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் வகிபாகம் (role) தவிர்க்க முடியாததாக இருப்பதேன் ? (04 புள்ளிகள்)

(iv) சிறந்த வரிமுறையொன்றின் விரும்பத்தக்க பண்புகளைக் கூறுக. (04 புள்ளிகள்)

(v) இறைக் கொள்கையானது வருமானச் சமமின்மையை நீக்கக் கூடிய வழிவகைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

8. (i) இலக்கங்களிலான உதாரணங்கள் தந்து உற்பத்தியில் முழு நன்மை மற்றும் ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தின் போக்குகளைத் தீர்மானிக்கவல்ல பொருளியற் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சர்வதேச வர்த்தகத்தின் மீதான தடைகளைக் குறைப்பதற்கான உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியிலான அணுகுமுறைகளை ஒப்பிட்டு, வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) நெகிழ்தன்மை வாய்ந்த நாணயமாற்று முறைமையொன்றின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் எவை ? (04 புள்ளிகள்)

(v) இலங்கையின் ஏற்றுமதிச் செலவுகள் மற்றும் இறக்குமதி வருவாய்களின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிக்குக. இலங்கையின் பாரிய வர்த்தகப் பற்றாக்குறை நிலைக்கு பங்களிப்புச் செய்துள்ள காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

9. (i) பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

(ii) நாடொன்றின் உற்பத்தித்திறன் மட்டத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளைக் கூறுக. (05 புள்ளிகள்)

(iii) "தேசிய மட்டத்தில் இலங்கையின் மானுட அபிவிருத்தி தொடர்பான அடைவுகள் சிலாகிக்கத் தக்கவையாயினும் இது தொடர்பில் மாகாணங்களுக்கிடையிலும் துறைகளுக்கிடையிலும் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன." விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றத்தின் (demographic transition) பிரதான அம்சங்களை இனங்காண்க. அவற்றின் பிரதான பொருளாதார விளைவுகள் யாவை ? (05 புள்ளிகள்)

10. (i) இலங்கையின் சேமிப்பு-முதலீட்டு இடைவெளியின் அண்மைக் காலப் போக்குகளைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(ii) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் 4000 டொலர் தலைக்குரிய வருமானத்தை அடைவதை இலக்காகக் கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தில் தற்போது காணப்படும் எதிர்க்கணிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி ஏற்படுத்தவல்ல தாக்க விளைவுகள் எவை ? (06 புள்ளிகள்)

(iii) இலங்கையை ஆசியாவின் முக்கியமான சுற்றுலாமையமாக மாற்றுவதில் இலங்கையின் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவால்கள் எவை ? (05 புள்ளிகள்)

(iv) வறிய நாடுகள் நீண்டகாலரீதியானதும் உறுதியானதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதில் நல்லாட்சி நிலவுவது எந்தளவுக்கு முக்கிய பங்கு வகிக்க முடியுமென நீர் கருதுகிறீர் ? (05 புள்ளிகள்)

* * *